மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

பல்லாவரம்.

**O.S.No.403/2023**
**OLD.No. 202/2016**
**DW 1**

இந்நீதிமன்றத்தில் Gr-III பெஞ்ச் கிளார்க் திரு.பூபதி அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1973ஆம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைக்கு உட்பட்டு இன்று 2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ஆம் நாள் என்னால் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : Pramila | மதம் | : இந்து |
| தந்தை / கணவர் பெயர். | : எட்வர்ட் | ஊர் | : |
| வயது | : | | |
| தொழில் | : | | |
| இனம் | : | | |
| கிராமம் | : | | |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது தாயார் எனக்கு எழுதிக்கொடுத்த செண்டில்மெண்ட் பத்திரத்தில் எனது சகோதரர் பன்னீசெல்வம் ஒரு தரப்பினராக உள்ளாரா என்றால் இல்லை. எனவே அவரை தரப்பினாராக சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல சேர்க்கவேண்டும். நாங்கள் நடத்தி வந்த எலிசபத் நர்ஸிங் ஓம் என்ற பள்ளியை தற்போது நடத்தி வர வில்லை என்றால் ஆம். உயர் நீதிமன்ற உத்தரவுப்படி முடப்பட்டது என்றால் ஆம். எனது சகோதர்களிடையே 4 வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் ஆம். எனது தாயார் எனக்கு செண்டில்மெண்ட் எழுதி வைத்தது மூலம் நான் சொத்தின உரிமையாளர் என்றால் ஆம். அனுபவத்திலும் நான் தான் இருக்கிறேன். பன்னீசெல்வம் எனது சகோதார் என்னுடன் வசித்து வருகிறார்.

நான் பென்னிராஜ் மற்றும் அருள்ராஜ மீது தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு 656/2023 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஆம். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கின் பிராது தான் என்றால் ஆம் அவை வா.சாஆ 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அசல் வழக்கில் எனது தாயார் எழுதி வைத்த செண்டில்மெண்ட் பத்திரத்தின் படி நான் தான் சொத்தின் உரிமையாளர் என பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் ஆம். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் மேற்படி அசல் வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் உரை என்றால் ஆம் அவை வா.சாஆ 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி எதிர்

உரையில் இவ்வழக்கின் வாதிகள் அவர்களும் சொத்தின் உரிமையாளர்கள் என குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.

பென்னிராஜன் என்பவர் நான் வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் தொந்தரவு செய்து வருகிறேன் என நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரியுள்ளார் என்றால் ஆம். அவை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் ஆம். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் அந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பதில் உரை என்றால் ஆம் அவை வா.சா.ஆ 19 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அந்த பதில் உரையில் எனது தாயார் செண்டில்மெண்ட் எழுதிக்கொடுத்ததால் அந்த சொத்திற்கு நான் உரிமையாளர் என்றால் ஆம். மேற்படி பதில் உரை பத்தி 14ல் எனது தாயார் எனது பெயரில் எழுதி வைத்த செண்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யாததால் அவை உண்மையானவை என்று நான் கோரியுள்ளேன் என்றால் ஆம்.

எனவே வாதிகளால் எனது தாயார் எனது பெயரில் எழுதி வைத்த செண்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு அரசாங்கத்தால் பட்டா வழங்கப்பட்டுள்ளதால் அதன் படி தான் உரிமை கோர முடியும் என்றும், செண்டில்மெண்ட் பத்திரத்தால் கோர முடியாது என்றால் சரியல்ல. செல்லாது செண்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் நான் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

S/d xxxx

District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.